**மாண்பமை சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம்**
**முன்னிலை : திரு.சா.முனுசாமி, பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, இராணிப்பேட்டை.**

**2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03 ம் நாள் புதன் கிழமை**

**IA.No.10/2025 in OS.No.253/2020**

திரு.எஸ்.கண்ணன்(இறந்துவிட்டார்) -- மனுதாரர்கள்/வாதிகள்
மற்றும் சிலர்

எதிர்

திரு.டி.வேதாத்ரி மற்றும் சிலர் -- எதிர்மனுதாரர்கள்/பிரிவாதிகள்

இம்மனு கடந்த 22.08.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜே.ராதாகிருஷ்ணன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.டி.லட்சுமணன் அவர்களும் ஆஜராகி வாதிட்ட இருதரப்பு வாதம் மற்றும் வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

உத்தரவு

சி.பி.சி கட் 18 விதி 17 ன் கீழ், வா.சா.1 யை மீண்டும் அழைத்து விசாரிக்கவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.மனு சுருக்கம்

i. அசல் வழக்கில், ஏற்கனவே வா.சா.1 விசாரிக்கப்பட்டுள்ளார். இச்சாட்சி மூலம் வா.த.சா.ஆ.1 முதல் 12 வரை குறியீடு செய்யப்பட்டு குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், வழக்கிற்கு முக்கியமான சில ஆவணங்கள் வீட்டில் இடம்மாறிவிட்டது. அந்த ஆவணங்கள் தற்பொழுதுதான் கிடைக்கப்பெற்றுள்ளது. மனுதாரர்/வாதி வழக்கை நிரூபிக்க தற்பொழுது கிடைக்கப்பெற்றுள்ள ஆவணங்கள் முக்கியமான ஆவணங்கள் ஆகும். எனவே அந்த ஆவணங்களை குறியீடு செய்வதற்கு வா.சா.1 யை மீண்டும் அழைக்கவேண்டியது அவசியமாகும். இல்லையேல் வாதிக்கு பெறுத்த இழப்பு ஏற்படும் என குறிப்பிட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.எதிர்மனுவின் சுருக்கம்
i. சாட்சி மீண்டும் அழைத்து விசாரிக்க தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு. கடந்த 04.08.2025 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேலும் வா.த.சா.ஆ.1 முதல் 12 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், காலதாமத மனுவுடன் இம்மனுவினை தாக்கல் செய்யமுடியாது. சி.பி.சி. கட் 18 விதி 17 A கடந்த 01.07.2002 முதல் நீக்கம்செய்யப்பட்டுவிட்டது.

ii. சி.பி.சி. கட் 18 விதி 17ன் கீழ் வா.சா.1யை மீண்டும் அழைக்க முடியாது. இ.ம.எண்.11/2025உடன் தாக்கல் செய்துள்ள முதல் 4 ஆவணங்கள் பயண ஆவணங்கள் ஆகும், அவை இவ்வழக்கிற்கு தொடர்பில்லாதவை. மற்ற ஆவணங்களும் தொடர்பில்லாத ஆவணங்களாகும். மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள 12, 15, 16 மற்றும் 17 வாதுரையில் குறிப்பிடப்படாத ஆவணங்கள் ஆகும். ஆவணங்கள் 18, 19 மற்றும் 20 ஆகியவை வழக்கு சொத்தின் வில்லங்க சான்றிதழ்கள். இந்த ஆவணங்களின் அடிப்படையில் வழக்கை தீர்மானிக்க முடியாது. மனுதாரர் சட்ட நடைமுறையை பின்பற்றாமல் சட்டத்திற்கு முரணாக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டப்பட்டுள்ளது.

3. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், சி.பி.சி. கட் 18 விதி 17ன் கீழ் வா.சா.1யை மனுதாரர் மீண்டும் அழைத்து விசாரிக்க உரிமை உடையவரா?

4.தீர்மானம்

i. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. சி.பி.சி கட் 18 விதி 17ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ii. விதி 17ன் உள்ளடக்கம் :–நீதிமன்றம் உரிமைவழக்கின் எந்தக் கட்டத்திலும் விசாரிக்கப்பட்ட சாட்சி எவரையும் மீண்டும் நீதிமன்றத்திற்கு வரவழைக்கலாம் மற்றும் (அவ்வப்பொழுது அமலிலுள்ள சாட்சிய சட்டத்திற்கு உட்பட்டு) நீதிமன்றம் தக்கதெனக் கருதும் கேள்விகளை அவரிடம் கேட்கலாம்.

a. சி.பி.சி. கட் 18 விதி 17ன் கீழ், ஏற்கனவே விசாரிக்கபட்ட சாட்சியை வரவழைத்து தான் தக்கதென கருதும் கேள்விகளை நீதிமன்றம் சாட்சியிடம் முன்வைக்கலாம். இது நீதிமன்றத்தின் தனிப்பட்ட உள்ளார்ந்த அதிகாரமாகும்.

b. வழக்கு விசாரணையின் பொழுது ஒரு பொருண்மை குறித்து விளக்கம் கேட்கவோ அல்லது ஒரு பொருண்மை மீது குழப்பம் ஏற்பட்டிருக்குமெனில் அதனை தீர்க்கவோ அல்லது முரண்பாடுகள் ஏதேனும் இருக்குமெனில் அதனை களையவோ சாட்சி மீண்டும் அழைக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. மாறாக, சாட்சியத்தில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்ய அல்ல.

c. சி.பி.சி. கட் 18 விதி 17ன் கீழ், ஒரு சாட்சியை மீண்டும் அழைக்க நீதிமன்றத்திற்கு மட்டுமே அதிகாரம் மாறாக எந்தவொரு தரப்பினருக்கும் சாட்சி மீண்டும் அழைத்து விசாரணை செய்யவோ அல்லது குறுக்கு விசாரணை செய்யவோ அதிகாரம் இல்லை. நீதிமன்றம் ஒரு சாட்சியை வரவழைத்து சாட்சியத்தில் உள்ள பொருண்மை குறித்த விளக்கம், குழப்பம் மற்றும் முரண்பாடுகளை தவிர்க்க சாட்சியை மீண்டும் வரவழைக்கும்பொழுது வழக்கு தரப்பினர்கள் நீதிமன்றத்திற்கு, நீதிமன்றம் கேட்கும் கேள்விகளுக்கு துணைநிர்கவேண்டும். மாறாக, சாட்சிகளை தரப்பினர்கள் மீண்டும் அழைக்கமுடியாது.

d. சி.பி.சி. கட் 18 விதி 17ன் கீழ், தரப்பினர்கள் தங்கள் சாட்சியங்களில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்யவோ அல்லது குறுக்கு விசாரணையில் ஈடுபடவோ இவ்விதி அனுமதிக்காது. மாறாக, நீதிமன்றத்தின் சர்ச்சைகளை களையும்பொருட்டு நீதிமன்ற செயல்பாட்டிற்கு உதவுவதற்காக இவ்விதி உருவாக்கப்பட்டுள்ளது.

e. இம்மனுவின் கீழ் மனுதாரர் தன்னிச்சையாக வா.சா.1 னினை மீண்டும் அழைத்து விசாரிக்க உரிமைகொண்டவர் அல்ல. இதுகுறித்து,

மாண்பமை உச்சநீதிமன்றம் கடந்த 05.05.2025 அன்று

SHUBHKARAN SINGH
VS
ABHAYRAJ SINGH & ORS

என்ற வழக்கில் சி.பி.சி. கட் 18 விதி 17 ன் கீழான நீதிமன்றத்தில் உள்ளார்ந்த அதிகாரம் குறித்தும், இவ்விதியின் கீழ் தரப்பினருக்குள்ள உள்ள அதிகாரம் குறித்தும் தீர்மானித்துள்ளது. இம்முன்தீர்ப்பில்

Order 18 Rule 17 of the Code is not a provision intended to enable the parties to recall any witnesses for their further examination-in-chief or cross-examination or to place additional material or evidence which could not be produced when the evidence was being recorded. Order 18 Rule 17 is primarily a provision enabling the court to clarify any issue or doubt, by recalling wny witness either suo motu, or at the request of any party, so that the court iteself can put questions and elicit answers. Once a witness is recalled for purposes of such clarification, it may, of course, permit the parties to assist it by putting some questions.

மேற்கண்ட முன்தீர்ப்பின்படி, ஒரு சாட்சி நீதிமன்றம் அழைத்து கேள்வி எழுப்பும்பட்சத்தில் நீதிமன்றத்திற்கு வழக்கு தரப்பினர்கள் உதவிடவேண்டுமே தவர முதன்மை சாட்சியம், குறுக்கு விசாரணை மற்றும் கூடுதல் சாட்சி மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்ய தரப்பினர்களுக்கு இவ்விதி அனுமதி அளிக்கவில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வனைத்தும் இந்நீதிமன்றம் வா.சா.1 யை தன்னிச்சையாக அழைக்கவில்லை மாறாக, மனுதாரர் மா.சா.1 யை மீண்டும் அழைத்து ஆவணங்கள் குறியீடு செய்ய இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட மாண்பகை உச்சநீதிமன்றத்திற்கு முரணாக மனுதாரர் கோரிக்கை உள்ளது.

அசல் வழக்கை எதிர்வரும் 05.09.2025 க்குள் இறுதியாக தீர்மானித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில், இம்மனுவினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல. இம்மனுவினை ஏற்பத்தில் அடிப்படை காரணம் இல்லை.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று, 03.09.2025 திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராணிப்பேட்டை.

மனுதாரர் தரப்பு :– சாட்சி மற்றும் சான்றாவணங்கள்– இல்லை.

எதிர்மனுதாரர் தரப்பு:– சாட்சி மற்றும் சான்றாவணங்கள்– இல்லை.

சார்பு நீதிபதி,
இராணிப்பேட்டை.